**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. No.196/2011**

**Date : 20.04.2026**

**பி.வா.சா.1 – ராஜப்பன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடரச்சி.**

வழக்கு பட்டிகை சொத்து ஆதியில் செட்டியார் என்பவரிடமிருந்து மாடத்தி என்பவர் விலைக்கு வாங்கிய பின் மாடத்திக்கு உரிமைப்பட்ட சொத்து என்றால் சரிதான். மாடத்தியின் கணவர் சுடலைமுத்து மாடத்திக்கு முன்பாகவே இறந்துவிட்டார் என்றால் சரிதான். ஆகையால் வழக்கு பட்டிகை சொத்து மாடத்தியை தவிர வேறு யாருக்கும் வழக்கு பட்டிகை சொத்தில் உரிமை கிடையாது என்றால் சரிதான். மாடத்தி பெண் என்பதாலும் மாடத்தி பெயரில் அவர் விலைக்கு வாங்கியதாலும் மாடத்தி மகளான ராமலெட்சுமிக்கு இவ்வழக்கு பட்டிகை சொத்தில் உரிமை உண்டு என்றால் சரியல்ல. ஆண் வாரிசுக்கு மட்டும் தான் உரிமை உண்டு.

எனது தாயார் சங்குமுத்துவின் சகோதரி மீனா என்றால் சரிதான். இளைய சகோதரி. மேற்படி மீனாவிற்கு குழந்தைகள் கிடையாது என்றால் சரிதான். மேற்படி மீனா திருமணமானவரா இல்லையா என்றால் திருமணமானவர். இவ்வழக்கு பட்டிகை சொத்தினை பொறுத்து 2007 ஆண்டு பாக பிரிவினை செய்த போது மீனாவும் மீனாவின் கணவரும் உயிருடன் இல்லை என்றால் சரிதான். ஆகையால் வழக்கு பட்டிகை சொத்தான 3.350 சென்ட் முழுவதையும் அருணாச்சல மூப்பனாரின் 4 மகள்களும் சேர்ந்து 2007 ம் ஆண்டு பாக பிரிவினை செய்தார்கள் அது பிவாசாஆ 6 என்றால் சரிதான். மாடத்தி அருணாச்சல மூப்பனாருக்கு வழக்கு பட்டிகை சொத்தினை எழுதி கொடுத்தாரா

என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. மாடத்தி அருணாச்சல மூப்பனாருக்கு வழக்கு பட்டிகை சொத்தினை எழுதி கொடுக்காததால் மாடத்தியின் பத்திரத்தை வைத்து நாங்கள் பாக பிரிவினை செய்தோம் என்றால் சரிதான்.

பிவாசாஆ 1 ல் மாடத்திக்கு சிதம்பரதானு செட்டியார் விலைக்கு கொடுத்த பத்திரம் என்றால் சரிதான். 12.09.1968 ல் அருணாச்சல மூப்பனார் வழக்கு பட்டிகை சொத்தின் பாதியான அவருக்கு பாத்தியப்பட்ட 1 ¾ சென்ட்டை நடராஜன் என்பவருக்கு அடமானம் வைத்திருந்தார் அதன் அடமானப் பத்திரம் பிவாசாஆ 3 என்றால் சரிதான். 2004 ம் வருடம் வாதி பெயருக்கு வழக்கு பட்டிகை சொத்தினை எழுதிய பின்பு தான் 2007 ல் நாங்கள் பாக பிரிவினை செய்தோம் என்றால் சரிதான். 2007 ல் பாக பிரிவினை செய்த போது எடுத்த வில்லங்க சான்றிதழான பிவாசாஆ 22 ல் மேற்படி விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு சரியாக தெரியவில்லை.

எனது தாத்தா அருணாச்சல மூப்பனாருக்கு முழுமையாக சொத்தும் உரிமைப்பட்டதாக எதுவும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. பட்டா உள்ளது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் வழக்கு பட்டிகை சொத்து சர்வே எண் Q-17/215 க்கான பட்டாவில் வாதியின் பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். **மேற்படி வாசாஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் ஆவணம் வாதி பெயரிலான நிலவரி ரசீது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

வேலாயுதம் மாடத்தி மற்றும் அருணாச்சலம் ஆகியோரிடையே பாக பிரிவினை செய்ததற்கான ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. அது குறித்து எனக்கு தெரியாது. பொதுவாக திருமணத்தின்போது பெண் பிள்ளைகளுக்கு நகை, ரொக்கம்

மற்றும் சொத்துக்கள் கொடுப்பது வழக்கம் என்றால் சீர்வரிசை கொடுப்பார்கள். சொத்து கொடுப்பார்களா என்று தெரியாது. திருமணத்தின்போது பெண்களுக்கு சொத்து கொடுக்கக்கூடாது என்று ஏதேனும் சட்டம் உள்ளதா என்றால் அது குறித்துஎனக்கு தெரியாது. வாதி பரத சமுதாயத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். மேற்படி வழக்கு பட்டிகை சொத்து பரதர் தெருவில் உள்ளது என்றால் சரிதான். நான் எந்த சமுதாயத்தை சேர்ந்தவர் என்றால் சேனைத் தலைவர் சமுதாயத்தை சேர்ந்தவர்.

மேற்படி பரதர் தெருவில் பரத சமுதாயத்தை சேர்ந்த மக்கள் தான் வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். முன்பு எனது சமுதாயத்தை சேர்ந்தவரும் வாழ்ந்து வந்தார். 03.10.1972 ம் தேதி அருணாச்சல மூப்பனார் அடகு வைத்த வழக்கு பட்டிகை சொத்தின் பகுதியை பாக பிரிவினையில் இல்லாத மீனா என்பவர் மேற்படி அடமானத்தற்கான அசலும் வட்டியும் செலுத்தி தனது பெயரில் 1972 ல் மேடோவர் பத்திரம் பெற்றுக் கொண்டார் என்றால் சரிதான். மேற்படி மீனா என்பவர் அடமானத்தை மீட்டதால் மேற்படி பாக பிரிவினை செய்யாத வழக்கு பட்டிகை சொத்தினை அவர்களுக்கு சகோதரிகள் அனைவரும் பாக பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

பிரதிவாதிகளுடைய பிரிக்கப்படாத வழக்கு பட்டிகை சொத்தினை பிரதிவாதிகளின் சித்தியான மீனா என்பவர் மீட்டெடுத்ததால் பாக பிரிவினை செய்ய எங்களுக்கு உரிமை உண்டு என்றால் சரிதான். அதைப்போல் பிரிக்கப்படாத வழக்கு பட்டிகை சொத்திற்கு பாதி பங்கினை ராமலெட்சுமியின் பிள்ளைகளுக்கு பங்கு உள்ளது என்றால் சரியல்ல. அதைப்போல் ராமலெட்சுமியின் பிள்ளைகள் 7 பேர்கள் சேர்ந்து அழகப்பன் என்பவருக்கு அதிகார பத்திரம் எழுதிக் கொடுப்பதற்கு அனைத்து உரிமைகளும் உள்ளது என்றால் சரியல்ல.

பொதுவாக உரிமையில்லாத சொத்தினை பாக பிரிவினை செய்ய இயலாது என்பது எனக்கு தெரியுமா என்றால் அது குறித்து தெரியவில்லை. ராமலெட்சுமிக்கு பிரிக்கப்படாத வழக்கு பட்டிகை சொத்தில் உரிமையிருந்ததால் அவரது பிள்ளைகள் வாதிக்கு கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. அதைப்போல் சொத்து அடமான மீட்பு சம்மந்தமான எழுதியுள்ள பத்திரத்தில் அருணாச்சல மூப்பனாரின் வாரிசுகள் தான் அதை மீட்க கடமைப்பட்டவர் என்றும் அருணாச்சல மூப்பனார் அவரது பங்கு சொத்தில் அடமானம் வைத்ததால் மேற்படி அடமானம் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அதைப்போல் தற்போது வரை பிரிக்கப்படாத வழக்கு பட்டிகை சொத்தினை வாதிகள் பரதர் தெருவில் தற்போதும் அனுபவத்தை கையில் வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். வாதியின் பெயரில் உள்ள பிரிக்கப்படாத 730 சதுர லிங்ஸ் சொத்து மேற்கனைய சொத்தினை தள்ளி பிரதிவாதிகளுக்கு உரிமைப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தை பாக பிரிவினை செய்யாததால் மாடத்தி இறந்தவுடன் சொத்தின் உரிமை அவரது பிள்ளைகளான அருணாச்சல மூப்பனாருக்கும் ராமலெட்சுமிக்கும் தானாகவே கிடைத்துவிட்டது என்றால் சரியல்ல.

மேற்படி ராமலெட்சுமிக்கு பிரிக்கப்படாத வழக்கு பட்டிகை சொத்தில் மேற்கனைய 1¾ சென்ட்டுக்கு சமமான 730 சதுர லிங்ஸ் சொத்தில் அவரது பிள்ளைகளுக்கும் உரிமை உள்ளது என்பதால் வாதிக்கு ஏற்படுத்திய கிரைய ஆவணம் செல்லும் என்றால் சரியல்ல. எனவே வாதிக்கு பிரிக்கப்படாத வழக்கு பட்டிகை சொத்தில் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் பிரதிவாதியின் தாத்தாவான அருணாச்சல மூப்பனாருக்கு பிரிக்கப்படாத பாகத்தில் உள்ள பங்கின் ஆவணங்கள் என்றால் சரியல்ல. எனவே வாதி கோரியுள்ள

வழக்கின் பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணைக்காக முடிக்கப்படுகிறது</u>.**